This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# ஒரே ஒரு துரோகம்

www.writersujatha.com

## ராஜி–1

"பர்ஜஸ் மற்றும் லாக் அவர்கள் புத்தகத்தில் சொல்லியிருக்கும் இந்த வரையறைதான் குடும்பம் என்பதற்குச் கொஞ்சம் பொருந்தி வருகிறது. சமூகவியல் அறிஞர்கள் குடும்பம் என்பதை ஒரு ஆதாரவிஷயமாகக் கருத்து வேறுபாடில்லாமல் ஒத்துக் கொண்டாலும், குடும்பம் என்பது என்ன என்பதை அவர்கள் சரியாகச் சொல்வதில்லை. இந்த விதத்தில் கிங்ஸ்லி டேவிஸின் கூற்று சற்றுக் குறைபட்டது என்றே சொல்ல வேண்டும்.."

நிச்சயம் நீங்கள் இதைப் படிப்பதற்குள் ஒரு கொட்டாவி விட்டிருப்பீர்கள், இதோ என் வகுப்பு முன் ஸீட் மாணவிபோல, அதுவும் மதிய உணவு நேரத்துக்குப் பதினைந்து நிமிடம் இருக்கும்போது கிங்ஸ்லி டேவிஸின் குடும்பதைப்பற்றிப் பேசினால் கொட்டாவி விட்டம்வரை விரிவதில் ஆச்சரியமில்லைதான்.

என் எதிரே அந்த மாணவக் குடும்பத்தைப் பார்க்கிறேன். இவர்களில் எத்தனை பேர் ஸோஷியாலஜியை இஷ்டப்பட்டுத் தேர்ந்தெடுக்கிறார்கள்? இவர்கள் எல்லோரும் சமூகவியல் படித்துவிட்டு என்ன சாதிக்கப் போகிறார்கள்? பெரட்டோ காம்ட், மார்க்ஸ் ஸ்டரக்சர் என்று, வருஷா வருஷம் காலி முகங்களுக்குச் சொல்லிக் கொடுத்து நான் என்ன சாதிக்கிறேன்?' என்றெல்லாம் அந்தப் பசிவேளையில் நினைத்துப் பார்த்து ஒருவித விரக்தியில், "அடுத்த கிளாஸில் தொடர்கிறேன்" என்று சொல்லிவிட்டு, திடீர் என்று கிடைத்த விடுதலைக்கான சந்தோஷத்தை அவர்கள் முகத்தில் பார்க்க விருப்பமில்லாமல் உடனே புறப்பட்டு ஸ்டாஃப் ரூம் வந்து விட்டேன்.

"என்ன ராஜேஸ்வரி, சீக்கிரம் வந்துட்டீங்க?"

"பசி" என்றேன். ஸிங்குக்குப் போய் கையிலிருந்த சாக்பீஸ் சுவடுகளைக் கழுவிக் கொண்டு, முகத்தை ஒருமுறை சுவாரசியமின்றிக் கண்ணாடியில் பார்த்துக்கொண்டு... இருபத்தேழு வயசு.. மேசைமேல் எனக்கு வைத்திருந்த குறிப்பைப் பார்த்தேன்.

"சம்பத் என்கிறவர் பெங்களூரிலிருந்து போன் பண்ணியிருந்தார். அரைமணியில் மறுபடி கூப்பிடுவதாகச் சொல்லியிருக்கிறார்" என்று சாரதாதான் எழுதியிருந்தாள்.

"சாரதா எங்கே?"

"பிரின்ஸ்பாலைப் பார்க்கப் போயிருக்காங்க."

"சம்பத்தா, யாரது? எனக்கு எந்த சம்பத்தையும் தெரியாதே!" 'சம்பத், சம்பத்,' என்று என் ஞாபகத்தில் எங்கேயாவது ஒரு ஓரத்தில் சம்பத் இருக்கிறதா என்று தேடிப் பார்த்தேன். இல்லை.

"இந்தச் சீட்டு எனக்குத்தானே?" என்றேன்.